செ.வெ.எண். 1/2026 நாள் : 02.03.2026

# திருப்பூர் மாநகராட்சி
# பத்திரிக்கை செய்தி

திருப்பூர் மாநகராட்சி 60 வார்டுகள் கொண்ட கீழ்கண்ட நான்கு மண்டலங்களாக, மண்டலம் ஒன்றுக்கு 15 வார்டுகளாக செயல்பட்டு வருகிறது. இந்நான்கு மண்டலங்களிலும் சொத்துவரி, காலியிட வரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, பாதாள சாக்கடை கட்டணம், திடக்கழிவு மேலாண்மை கட்டணம், மற்றும் குத்தகை இனங்கள் ஆகியவைக்கான வரி மற்றும் கட்டண நிலுவை செலுத்த பொதுமக்களின் வசதிக்காக வாரநாட்கள் மற்றும் அனைத்து சனி மற்றும் ஞாயிற்றுகிழமைகளிலும் காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை செயல்படும் மைய அலுவலக கணிணி வரி வசூல் மையம், நான்கு மண்டல அலுவலகங்கள், செட்டிபாளையம், தொட்டிபாளையம், நெருப்பெரிச்சல், மண்ணரை, குமரன் வணிகவளாகம், முத்தணம்பாளையம், வீரபாண்டி, முருகம்பாளையம் மற்றும் பாண்டியன் நகர், ஆகிய கணிணி வரி வசூல் மையங்களில் பணமாகவோ அல்லது "ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி" என்ற பெயரில் காசோலை/ வரைவோலை மூலமாகவோ வரி மற்றும் கட்டணங்கள் செலுத்தலாம்.

மேலும் எளிய முறையில் கீழ்கண்ட இணையதளம் வழியாக வரி மற்றும் கட்டணங்கள் செலுத்தலாம்.

| Use "Quick Payment" or "Register & Login" to |
|---|
| https://tnurbanepay.tn.gov.in |

கைபேசியில் ஜி–பே, போன்–ஃபே மற்றும் பே.டி.எம் செயலிகள் மூலமாகவும், வரி மற்றும் கட்டணங்கள் செலுத்தலாம்.

இதன்மூலம் பொது மக்கள் தங்களது 2025–26 இரண்டாம் அரையாண்டு வரையான வரி நிலுவைகளை உடன் செலுத்தி, மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு உதவ வேண்டும் என மாநகராட்சி ஆணையாளர் திரு.எம்.பி.அமித் இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாநகராட்சி.**